## இலங்கை கால்பந்து சம்மேளனம் - 2016

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் சம்மேளனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் நிறைவேற்றுக் குழுவின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக்கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

சம்மேளனத்தின் பதவியணியினருக்கு சேவை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்காக அரை மாதச் சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 5,130,250 தொகையான ஓய்வூதிய நலக் கட்டுப்பாடு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும்

நியமத்தில் ஊழியர் நலன்கள் தொடர்பாக 28.15 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஓய்வூதிய நலன்கள் பொறுப்பில் தற்போதைய பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பேரில் சம்மேளனத்தின் மூலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய விளையாட்டரங்குகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சர்வதேச உதைப்பந்தாட்டச் சம்மேளத்தினால் நேரடியாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதி, குத்தகை சொத்துக்களின் கீழ் தவறாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மீது பிற்போடப்பட்ட பொறுப்பொன்றாக ரூபா 146,285,797 தொகை ஐந்தொகை திகதியில் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த வரவுப் பொறுப்புக்களில் ரூபா 8,291,439 தொகை மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்கீட்டு தவறு காரணமாக மீளாய்வாண்டிற்காக நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு, ரூபா 3,400,664 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 17,507,848 தொகையான காசு மற்றும் அதற்குச் சமமான மீதிகளில் ஒரு நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட ரூபா 730,837 ஆன வங்கி மேலதிகப் பற்று மீதியொன்றை கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 நிதி முறைகேடுகள்

போட்டி நடுவர்களுக்கென குறிப்பிட்டு மேற்கொண்ட தவறான கொடுப்பனவு ரூபா 25,110,538 மற்றும் நடைமுறைக் கணக்குகளுக்கு இடையே மாற்றப்பட்ட ரூபா 20,295,000 இற்குரிய இடம்பெற்றுள்ள நிதி மோசடி தொடர்பாக குற்றத் தடுப்பு பரிசோதனைத் திணைக்களத்தினால் மேலதிக பரிசோதனை நடாத்தப்பட்டு வருவதுடன் அக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் மாற்றல் கட்டளை, நாட்குறிப்பு பதிவுகள் மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு உரித்தாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் குறித்த பேரேட்டுக் கணக்கு மீதிகளுடன் இணக்கம் செய்த போது ரூபா 19,166,933 கூட்டுத்தொகையான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

| | கணக்கு | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் | பேரேட்டுக் கணக்கு மீதிகள் | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | இருப்புக் கணக்கு | 153,850 | 1,345,374 | 1,191,524 |
| (ii) | சேமிப்புக் கணக்கு<br>கணக்கு இலக்கம் 11502007828 | 1,427,837 | 7,113,048 | 5,685,211 |
| (iii) | நடைமுறைக் கணக்கு<br>கணக்கு இலக்கம் - 01-1033468-02 | 2,993,420 | 5,793,120 | 2,799,700 |
| (iv) | கணக்கு இலக்கம் - 115010057027 மேலதிகப்பற்று | 730,837 | 5,130,237 | 4,399,400 |
| (v) | கணக்கு இலக்கம் - 115010018929 | 325,600 | 4,588,305 | 4,262,705 |
| (vi) | கையிலுள்ள காசு | 140,000 | 968,393 | 828,393 |
| | **மொத்தம்** | **5,771,544** | **24,938,477** | **19,166,933** |

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 240,645,120 | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| (ii) | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,203,403 | வைப்புப் பதிவேடுகள் |
| (iii) | கிடைக்க வேண்டிய அனுசரணையாளர் கட்டணங்கள் மற்றும் மானியங்கள் | 17,170,577 | விரிவான பட்டோலைகள் |
| (iv) | கிடைக்க வேண்டிய ஏனைய கடன் | 1,000,000 | விரிவான பட்டோலைகள் |
| (v) | பிற்போடப்பட்ட வருமானம் | 146,285,797 | விரிவான பட்டோலைகள் |
| (vi) | நிறுத்திவைக்கப்பட்ட நிதியம் | 4,582,669 | விரிவான பட்டோலைகள் |

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவையின் நிதிப்பிரமாணம் 757 இன் பிரகாரம் சம்மேளனத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சம்மேளனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 22,454,656 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,696,804 ஆக காணப்பட்டமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,242,148 ஆன வீழ்ச்சியொன்றை காண்பித்தது. தொழிற்பாட்டுச் செலவினம் ரூபா 35,269,589 ஆல் குறைவடைந்த போதிலும் சர்வதேச கால்பந்து சம்மேளனத்திடமிருந்து கிடைத்திருந்த நிதிகள் ரூபா 43,757,618 ஆல் வீழ்ச்சியடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 859,708 ஆன முற்பணத் தொகை உட்பட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்மேளத்தின் மூலம் போட்டி ஒழுங்கமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,664,137 ஆக இருந்தது. குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் முடிவடைந்ததன் பின்னர் முற்பண தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய முற்பணத்தொகையை தீர்மானித்தல் மற்றும் முற்பண பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 மனித வள முகாமைத்துவம்

சம்மேளனத்திற்காக அமைப்பு வரைபடம் மற்றும் அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனரொன்று காணப்பட வேண்டிய போதிலும், சம்மேளத்தின் ஆரம்பம் முதல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்றும் அமைப்பு வரைபடமொன்றும் காணப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 பிரிவின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 பிரிவின் பிரகாரம் ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஒவ்வொரு நிதியாண்டு தொடங்குவதற்கு முன்னரும் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சம்மேளனத்தினால் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் சம்மேளனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) முற்பணங்களை தீர்வுசெய்தல் | முற்பணக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை |
| (ஆ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படாமை மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை. |
| (இ) நிதிக்கட்டுப்பாடு | (i) நடைமுறை வங்கிக் கணக்குகளுக்கு இடையே வரையறையொன்று இல்லாமல் பணப் பரிமாற்றல் இடம்பெற்றமை.<br>(ii) கணக்குகளில் சாதகமான மீதிகள் காணப்படுகையில் மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை<br>(iii) வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை |